REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 14உ செவ்வாய் (28—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 15உ புதன் (29—6—55) [இதழ் 12

கொடுவினையை நினைவூட்டும் கொடுந் தண்டனை!

நாயகனுக்கு நஞ்சூட்டிய நடிகையின் கதி

வியன்னா, ஜூன் 26—

அழகி அவள். ஒரு நடிகை. 33 வயதான நட்சத்திரம். ஹெல்கா ஹ்ரூபி என்பது பெயர்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

நிலச் சீர்திருத்தத்தால் மட்டும்

உழவர்கள் வாழ்வு உறுதியாகுமா?

வட ஆற்காடு மாவட்ட தி. மு. க. கிளை சிறப்புக் கூட்டம்

சமரச எழுச்சி: பொதுச்செயலாளர் மகிழ்ச்சி

வேலூர், ஜூன் 27—

வட ஆற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் சிறப்புக் கூட்டம், நேற்று பிற்பகல் 2-30 மணி அளவிற்கு, வேலூர் டவுன் ஹாலில் பொதுச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையின் கீழ் கூடியது

வ. ஆ மாவட்டக் கிளையில் (ஏற்பட்டிருந்த பிணக்கு தீர்ந்து) நல்லுறவு நிலவவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு 57 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

பொதுச் செயலாளருக்கு அலுவல்களில் துணையாக இருக்கும் பொருட்டுத் தோழர்கள் க. அறிவழகன், எஸ். எஸ். தென்னரசு, நெடுமாறன், கோ. கிருட்டிணன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர். வேறு யாரும் அனுமதிக்கப்படவில்லை.

நல்ல முடிவை எதிர்பார்த்து ஏராளமான கழகத் தோழர்கள் வெளியே ஆவலோடு காத்துக் கொண்டிருந்தனர்.

பிணக்கு ஏற்படும் என்று மாற்றுக் கட்சித் தோழர்கள் எதிர்பார்த்திருந்ததால், இந்த சிறப்புக் கூட்டம் அனைவர் கவனத்தையும் ஈர்ப்பதாக அமைந்திருந்தது.

பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபட்டிருக்கும் தோழர்கள் கொள்ளவேண்டிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு பற்றியும், ஒருவருக்கொருவர் மனமாச்சரியமும், பிணக்கும் கொள்ளாமல் நட்புறவோடு கொள்ளவேண்டிய குடும்பப் பாசம் பற்றியும், எதிர்காலத்தில் கழகத்தைக் கட்டிக் காத்துச் செல்லவேண்டிய விதம் பற்றியும், வ. ஆ. மாவட்டக்கிளையின் நிலைமை பற்றியும் சுமார் 1½ மணி நேரம் விளக்கமும் தெளிவும் நிறைந்த அறிவுரை ஆற்றினார்கள்.

உறுப்பினர்கள் எல்லோரும் ஒருமனப்பான்மையோடு, எதிர்காலத்தில் கடமைகளை ஆற்றிச் செய்வதற்கான உருவான யோசனைகளை கூறுமாறு பொதுச் செயலாளர் உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

யோசனைகள் கூறும் விவாதத்தில் தோழர்கள் மா. பா. சாரதி, ஏ. ஜி. சாமி, திருப்பத்தூர் நடேசன், க. நெடுஞ்சோழன், பசுல், ஏ எல். சி. கிருஷ்ணசாமி, ப. உ. சண்முகம், ச. வெ. சுப்பராயன், ஆதிமூலம், சீனிவாசன், இளஞ்செழியன், சம்பங்கி, முல்லைசத்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேசியவர்களில் பெரும்பாலோர் தனிப்பட்டவர்களிடம் விருப்பு—வெறுப்பு காரணமாக எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை என்பது குறித்தும், ஒழுங்குமுறையும், ஜனநாயகமும் வளரவே பிரச்சினைகள் எழுவதாகவும் கூறினர்.

இறுதியாகக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:—

1. கழகங்கள் இல்லாத ஊர்களில் திடீர்க் கழகங்கள் அமைத்து மாவட்டப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிற குற்றச்சாட்டை விசாரிக்கத் தலைமைக் கழகத்தின் சார்பாகத் தோழர் என். வி. நடராசன் அவர்களும், மாவட்டக் கழகத்தின் சார்பாகத் தோழர்கள் ஏ எல். சி. கிருஷ்ணசாமி, போளூர் சுப்பிரமணியம் ஆகியோரும் கொண்ட மூவர் குழு ஒன்றை அமைப்பது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2 மூவர் குழு சமர்ப்பிக்கிற அறிக்கையை வைத்துத் தலைமைக் கழகம் மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இக்கூட்டம் தலைமைக் கழகத்தைக் கேட்டுக் கொள்கிறது.

3. மாவட்ட நடவடிக்கைகளை இப்பொழுது அமைந்துள்ள மாவட்டக் கிளை முறைப்படி செய்து வரவேண்டும் என்றும், எல்லோரும் கழக நடவடிக்கைகளில் கலந்து ஆதரவளித்து செயல் முறைகளைச் செவ்வனே செய்துவர வேண்டும் என்றும், மாநில மாநாட்டு நிதிக்கு வ. ஆ. மாவட்டத்தின் சார்பாகத் தரவேண்டிய பங்குத் தொகை ரூ. 2,000 தலைமைக் கழகத்திடம் சேர்ப்பிக்க எல்லாக் கிளைகளும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இக்கூட்டம் முடிவு செய்கிறது.

இந்த மூன்று தீர்மானங்களும் ஒருமனதாக எல்லோராலும் நிறைவேற்றப்பட்டன.

உறுப்பினர்கள் நல்ல சமரச முடிவுக்கு வந்தமை குறித்து, பொதுச் செயலாளர் உறுப்பினர்கள் எல்லோரையும் பாராட்டிப் பேசித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்.

இந்நாள் மாவட்டச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அவர்களும், முன்னாள் மாவட்டச் செயலாளர் தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி அவர்களும் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். கூட்டம் மாலை 6-30 மணிக்கு இனிது முடிந்தது. (ந-நி)

முதலமைச்சருடன் முரண்படும் அமைச்சர்கள்

சிக்கலைத் தீர்க்க காங்கிரஸ் மேலிடம் முயற்சி

சிம்லா, ஜூன் 28—

இமாசலப் பிரதேச முதலமைச்சரின் யோசனையை இரண்டு அமைச்சர்கள் நிராகரித்ததின் விளைவாக அங்கு நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், இதுகுறித்து கவர்னர் மேற்கொண்ட சமரச முயற்சிகளும் பலனளிக்காமல் போய்விடவே, மேற்படி விவகாரம் காங்கிரஸ் மேலிடத்திற்குப் போயிருப்பதாகவும் கூறப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்துக்கு நான்கு தொழிலாளர் பலி!

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் நீடிக்கிறது

டார்ஜீலிங், ஜூன் 27—

கடந்த ஒரு வாரமாக இங்கு நடைபெற்று வரும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஒட்டி ஏற்பட்ட சிறு கலகம் ஒன்றில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக மூன்று தொழிலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறு வற்புறுத்துவதிலும், மறியல் செய்வதிலும் தொழிலாளர்கள் முற்பட்டிருக்கின்றனர்.

வேலை நிறுத்தத்தைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட போலீசாருக்கும் இந்த மறியலில் ஈடுபட்ட தொழிலாளருக்கும் கைகலப்பு ஏற்பட்டதில் இரண்டு போலீசாரும் மூன்று தொழிலாளர்களும் காயம்பட்டிருக்கின்றனர்.

பின்னரும் கலகம் வலுக்கவே போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மூன்று தொழிலாளரின் உயிரைக் குடித்திருக்கின்றனர்.

போலீசாரின் இந்த அடக்கு முறையினால் காயம்பட்ட இன்னுமொரு தொழிலாளி இறந்துபட்டதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது.

சுபாஷ் சந்திர போஸ் மகள் - நேரு சந்திப்பு

ஐரோப்பாவிலுள்ள ஆஸ்திரிய நாட்டிற்குச் சென்றிருக்கும் இந்தியப் பிரதமர் நேரு, வியன்னா நகரில், சுபாஷ் சந்திர போசின் மகள் அனிதா போஸ், அவரது வாழ்க்கைத் துணைவி எமிலி ஷெங்கல் ஆகிய இருவரையும் சந்தித்து உரையாடினாராம்; அவர்களுடன் காலை உணவருந்தினாராம்.

குடிசைத்தொழில்கள் கண்காட்சிக்கே பயன்படும்

இரண்டாவது திட்டத்தில் தென்னாட்டின் நிலை என்ன?

தோழர் சம்பத் இடித்துரை

கோவை, ஜூன் 25—

"இன்று நாட்டில் நிலச் சீர்திருத்தம் பற்றி பலர் பேசுகிறார்கள்; தி. மு. கழகம், நிலச் சீர்திருத்தம்—நிலத்திலே உழைப்பவருக்கு காணி நிலம்கூட இல்லாதிருப்பதும், உழைக்காமல் வாழ்பவர்களிடம் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் குவிந்திருப்பதுமான நிலைமை மாறி, உழுபவர்களுக்கு நிலத்தைப் பங்கிட்டுத் தரும் திட்டம்—தேவைதான் என்பதை வலியுறுத்திக் கூறுகிறது.

"ஆனால், இந்த நிலச் சீர்திருத்தம் செய்துவிட்டால் மட்டும் உழவர்களின் வாழ்வு உரம் பெற்றுவிடுமா?

"நிலச் சீர்திருத்தம் செய்தால், நாட்டின் மிகப் பெரும்பான்மையினரான விவசாயிகள் பயனடைவர் என்றும், அதன் விளைவாக நாட்டிற்கு நல்வாழ்வு கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

"நிலச் சீர்திருத்தத்தினால் மட்டும் பயன் வந்துவிடாது என்று தி. மு கழகம் கருதுகிறது.

"ஏனெனில், நிலமற்ற விவசாயிகளுக்கு ஓரளவு நிலம் கிடைத்து அவர்களுக்கு வேறு வேலை எதுவும் இல்லாவிட்டால் நாளடைவில் நிலம் பெற்ற விவசாயிகளுக்குப் பிறகு அவரது பிள்ளைகள் அந்த நிலத்தைப் பிரித்துக்கொள்வார்கள்; இரண்டு மூன்று தலைமுறைக்குப் பிறகு தனிப்பட்டவர் கையிலிருக்கும் நில அளவு மிகச் சிறியதாக இருக்கும். இரண்டு தலைமுறைக்குப் பிறகு மக்களின் வாழ்க்கைத்தரத்தைப் பார்த்தாலும் அப்போது மோசமாகத்தான் இருக்கும்.

"எனவே விவசாயத்திற்கு—நாட்டில் உள்ள எல்லா நிலங்களிலும்—தேவையானவர்கள் போக, மற்றுமுள்ள மக்களுக்கு வேறு தொழிலும், வேலையும் தர தொழிற்சாலைகள் வேண்டும். விவசாயத்தை நம்பிக்கிடக்கும் மக்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட வேண்டும்.

"ஆனால், இங்கு, தொழிற்சாலைகளைப் பெருக்குவதற்குப் பதிலாகக் குடிசைத் தொழில்களை வளர்க்கப் போகிறோம் என்கின்றனர் சர்க்கார்.

"மாட்டுக் கொம்பிலிருந்து சீப்பு செய்வது போன்ற குடிசைத் தொழில்கள், கண்காட்சிகளுக்குப் பயன்படுமே தவிர, அதுபோன்ற தொழில்களில் ஈடுபடுவோருக்குத் தரமான வாழ்க்கையைத் தராது.

"அதற்கு—மக்களுக்குத் தரமான வாழ்க்கையைத் தர—தேவையானது எல்லாம், பொருள்களை உற்பத்தி செய்யும் பெரும் தொழிற்சாலைகள் நிறையத் தோன்ற வேண்டும்,"

—என்று தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கோவையை அடுத்த சிங்காநல்லூரில், தி. மு கழகச் சார்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டார்:—

"வடநாட்டில், அந்த நாட்டு மக்களுக்கு தரமானதோர் வாழ்வு தருவதற்கென 30 மைல்களுக்கு ஒரு தொழிற்சாலைவீதம் நிறுவத் திட்டமிடப் பட்டிருக்கிறது; ஆனால், அதே நேரத்தில் தென்னாட்டின் தொழில் வளர்ச்சிக்கு, விரல் விட்டு எண்ணக்கூடிய காரியங்கள்கூட நடைபெறவில்லை.

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு முழுவதுமாகப் புறக்கணிக்கப்பட்டு விட்டது.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேனும் தென்னாட்டில் தொழில் வளர்ச்சிக்கான கவனம் செலுத்தப்படும் என்று கருதக்கூட இடமில்லை."

சமாதானத்துக்கு உதவ யூகோவுடன் உடன்பாடு

மூன்று தினங்கள் ஆலோசனை நடத்திய பின், சமாதானத்துக்கும், பாதுகாப்புக்கும் உதவுவதற்குப் பலம் பொருந்திய சுயேச்சையான யூகோஸ்லாவியா அவசியமென்று அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், யூகோ சர்க்கார்கள் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன.

அழைப்பை ஏற்றார்!

ரஷ்யாவுக்கு வருகை தருமாறு கோரும் சோவியத் [illegible] அழைப்பை, யூகோஸ்லாவியத் தலைவர் மார்ஷல் டிட்டோ ஏற்றுக் கொண்டதாகத் தகவல் தரப்படுகின்றது.

நம் நாடு
தி.மு.க. தினசரி இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 28—6—'55 செவ்வாய்

செயலில் வேண்டும்

"உண்மையில் இந்த மாநிலத்தில் சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளங்கள் பற்றி எனக்கு சங்கடம் ஏற்பட்டுள்ளது."

"கவர்னரும், உயர்நீதிமன்ற நீதிபதிகளும் தவிர மற்றெல்லோருக்கும் சரியான சம்பளம் தரப்படவில்லை."

"மேலிருந்து கீழ்வரை சம்பள விகிதங்களை மாற்றியமைக்க வேண்டும்."

"நிதி நிலைமை சரியாக இல்லாததே சம்பள உயர்வு கொடுக்காததற்குக் காரணமாகக் கூறப்படுகிறது,"

என்று, சென்னை கவர்னர் பிரகாசா, சென்னை சர்க்கார் தலைமை அலுவலக ஊழியர் சங்க ஒன்பதாவது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை சர்க்கார் ஊழியருக்கு இப்போது தரப்படும் சம்பளம், அவர்களின் வாழ்க்கைத் தேவைகளுக்குப் போதுமானதல்ல என்ற உண்மையைத் தாம் உணர்ந்திருப்பதாகக் கூறி, சர்க்கார் ஊழியர்களிடம் தமக்குள்ள அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார் போலும் கவர்னர் பிரகாசா!

"சென்னை சர்க்கார் ஊழியர்களுக்கும், மத்திய சர்க்கார் ஊழியர்களைப்போன்றே ஊதியம் தரப்படவேண்டும்—இரு சர்க்கார் ஊழியரின் சம்பள, படி, விகிதங்களில் வேற்றுமை இருக்கக் கூடாது,' என்று, சர்க்கார் தலைமை அலுவலக ஊழியர் சங்கத் தலைவர், அதே விழாவில் வரவேற்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நியாயமான கோரிக்கையை, சென்னை சர்க்கார் ஊழியர்கள் வெகு நீண்ட காலமாகவே வற்புறுத்தி வந்திருக்கின்றனர். ஆனால், மாறி மாறி அமைந்த சென்னை மந்திரி சபைகள் எவையும், இது பற்றி கவனிக்க மறுத்து வந்துள்ளன.

கவர்னர் பிரகாசா கூட, சம்பள உயர்வு என்று பேசியிருக்கிறாரே தவிர, சென்னை சர்க்கார் ஊழியர்களுக்கும், மத்திய சர்க்கார் ஊழியர்களைப் போன்றே சம்பளம் தரவேண்டும் என்ற கோரிக்கை பற்றி ஏதும் தெரிவிக்கவில்லை.

'கவர்னர், உயர்நீதி மன்ற நீதிபதிகள் தவிர இதரருக்குத் தரப்படும் சம்பளம் போதுமானதல்ல,' என்று கவர்னர் குறிப்பிடுகிறார்.

என்றாலும், அவர்களுக்குச் சம்பள உயர்வு தர, நிதிநிலைமை சரியில்லை என்று மந்திரிகள் கூறிவிடுவதாக விளம்புகிறார் அவர்!

சென்னை சர்க்கார், தங்கள் ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையைத் தட்டிக் கழிக்கமட்டுமல்லாது, மக்களின் வேறு பல பிரச்சினைகளுக்கும் கூட, தங்களின் 'நிதி நிலைமை சரி யில்லை' என்ற பல்லவியைப் பாடத் தவறியதில்லை.

இன்று ஆட்சி பீடத்தில்—இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பல மாநிலங்களிலும்—வீற்றிருக்கும் காங்கிரஸ்காரர்கள், வெள்ளையரை எதிர்த்துப் பேசிக்கொண்டிருந்த காலத்தில்,

'அதிகாரிகள் அத்தனை பேரும் வெள்ளையர்; அவர்களுக்கு கொள்ளைச் சம்பளம் கொட்டிக் கொடுக்கப்படுகிறது. இது அநீதி; அக்கிரமம்; நம்மை அடிமை கொண்டது மட்டுமின்றி, நம் நாட்டுச் செல்வத்தையும் கொள்ளையிடுகிறார்கள். மக்களின் உழைப்பைத் திருடுகிறான்; சூறையாடுகிறான்; ஆயிரம் இரண்டாயிரம் என அள்ளித்தருகிறான் வெள்ளிக் காசுகளை. இந்த அநீதியை ஒழிப்போம்; அவலத்தைத் துடைப்போம்.

"சுதந்திரம்பெற்றதும் எவருக்கும் மாதம் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் தரமாட்டோம்; குறைந்தபட்ச சம்பளத்திற்கும் அதிகபட்ச சம்பளத்திற்கும் மடுவுக்கும் மலைக்குமுள்ள இடைவெளியைத் தூர்த்து, ஏற்றத் தாழ்வின்றிச் செய்வோம்" என்று வாய்கிழியப் பேசினார்கள்.

ஆனால் இன்று, அவர்கள் விரும்பிய 'சுய ராஜ்யம்' கிடைத்த பின், அன்று அவர்கள் கூறியபடி அதிகாரிகளின் சம்பளங்கள் குறைக்கப்பட்டு ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்படுவதற்கு மாறாக, ஊழியர்கள் சம்பளம் உயர்த்தப்படாமலும், அதிகாரிகளின் சம்பளம் அளவுக்கு மீறி உயர்ந்தும் இருப்பதை நாம் காண்கிறோம். வேறு எல்லாவற்றிலும் போலவே இதிலும், காங்கிரஸ்காரர்கள், சொன்னசொல்லை மறந்துவிட்டார்கள்—அல்ல அல்ல—இன்று மறுத்துக்கூடப் பேசுகிறார்கள் சிலர்!

சென்னை கவர்னருக்குத் தரப்படும் கொழுத்த சம்பளம், இந்த நாட்டு மக்களின் இன்றைய நிலைக்கு மிகப் பெரியதொரு தொகையாகும். மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், கவர்னருக்குத் தரப்படும், மிக மிக அதிகமான சம்பளத்தையும் எண்ணிப் பார்ப்பவர்கள் நிச்சயமாக இது அநீதி என்ற முடிவுக்குத்தான் வருவார்கள்.

கவர்னரேகூட, 'எனக்கும், உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் தவிர...' என்றுதானே குறிப்பிட்டிருக்கிறார்!

கவர்னர், 'சர்க்கார் ஊழியருக்கு சம்பள உயர்வு தரப்பட வேண்டும்,' என்பதை என்ன பலன் எதிர்பார்த்துக் கூறியிருந்தாலும், உண்மையிலேயே அவரால் சர்க்கார் ஊழியருக்குத் தரப்படும் சம்பள விகிதங்களை உயர்த்தி மாற்றியமைக்க சென்னை சர்க்காருக்கு உதவும் வகையில் காரியங்கள் செய்ய முடியும்.

சென்னை சர்க்காரின் நிதி நிலைமை சரியில்லை என்ற பல்லவி, அவர்கள் கவர்னருக்குக் கொட்டித்தரும் கொள்ளைச் சம்பளம், வடநாட்டு எசமானர்களுக்குச் செலுத்திவரும் காணிக்கை — இவைபோன்றவற்றின் விளைவுதான் என்பதை அவர்கள் கூறிக் கொள்ளாவிட்டாலும், இந்த நாட்டு மக்கள் நன்கறிந்தே இருக்கின்றனர்.

எனவே, கவர்னர் தனக்கு சென்னை சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களை உயர்த்தவேண்டுமென்பதில் தூய்மையான நல்லெண்ணம் இருக்கிறது என்று ஊழியர்களின் மனதில் தோன்றும்படி செய்ய, தனக்குத் தரப்பட்டு வரும் கொழுத்த சம்பளத்தில் கணிசமான பகுதியைக் குறைத்துக் கொள்வதாக அறிவிக்கவேண்டும். அப்படிச் செய்வதின் மூலம் சென்னை சர்க்காருக்கு சில லட்சம் ரூபாய் மிச்சப்படலாம் ஆண்டுதோறும். அதனையும், வேறு நியாயமென ஒப்புக்கொள்ளப்படும் வழிகளால் மிச்சப்படுத்தக் கூடிய பணத்தையும் கொண்டு, சர்க்கார் ஊழியரின் சம்பளத்தை ஓரளவேனும் உயர்த்த முடியும்—அவர்களின் கோரிக்கை முழுவதையும் ஏற்றுக்கொள்ள, காலம் ஆகும் என்றெண்ணினாலும்.

கவர்னர், தன் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டால் மட்டும் போதுமானதல்ல. அவர் எவரின் தூதுவராக இங்கே கவர்னராக வீற்றிருக்கிறாரோ அந்த வடநாட்டு ஆதிபத்தியக்காரர்களுக்கும் 'கவர்னர்களின் சம்பளத்தைக் குறைப்பது தான் நியாயம்,' என்றும் எடுத்துக் காட்டவேண்டும்.

அவர் அப்படிச் செய்தால் தான், 'அவர், சர்க்கார் ஊழியரின் சம்பள உயர்வு விஷயத்தில் உண்மையாகவே அக்கரை கொண்டவர்,' என்று நினைக்க இடமிருக்க முடியும்.

இன்றேல், 'இது வெறும் உதட்டளவில் காட்டப்படும் அனுதாபம்,' என்றுதான் எண்ண முடியும்.

கவர்னர் தனது அனுதாபத்தைச் செயலில் காட்டுவாரா?

அவரது இந்தச் செயல், ஏற்கனவே, 'கவர்னரின் சம்பளம் குறைக்கப்பட வேண்டும்' என்பதற்காகப் போராட்டத்தில் ஈடுபடத் துடிதுடித்து நிற்கும் எண்ணற்றோரின் போராட்டத் துடிப்பை சற்று அடக்க சிறிதளவு 'உதவக் கூடியதாயும் கூட அமையலாம். எனவே, 'வாயுரை போதாது; செயலில் வேண்டும்,' என்று அவருக்கு நாம் கூறுகிறோம்.

ஏழு புதிய உயர்நிலைப் பள்ளிகள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் திறக்கப்படும்

இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த ஆண்டு ஏழு புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்படும்.

சுந்தரபாண்டியம், காளையார் கோவில், சத்திரப்பட்டி, அலன்குயம் (சாத்தூர்), வீரராப்பட்டி, மாத்தூர் திருவாடானை ஆகிய இடங்களில் அப்பள்ளிகள் அமைக்கப்படும். இவை எல்லாம் இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தால் திறக்கப்படும்.

நென்மேனி, இராமேசுவரம், திருப்புவனம் முதலிய இடங்களில் மூன்றும் படிவம் வரை உள்ள பள்ளிகளை மாவட்டக் கழகத்தார் திறப்பார்கள் என்றும், மேலும் 5 இடங்களில் உயர்தரத் தொடக்கப் பள்ளிகளும் திறக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

மேற்கண்ட பள்ளிகளை எல்லாம் நடத்த அரசாங்கம் அனுமதி தந்து விட்டதாம்.

மாப்பிள்ளைக்கு ரூ. 10,000 விலை கோரியவர்கள்!

பெண் வீட்டாரால் துரத்தப்பட்ட சம்பவம்

பெங்களூர், ஜூன் 22—

திருமணத்திற்கான சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், வரதட்சிணைத் தொகையைக் கூடுதலாகக் கேட்டதைத் தொடர்ந்து, பெண்ணும் பணமும் கொடுக்காமல் மாப்பிள்ளை வீட்டாரை ஊர் பொதுமக்கள் சேர்ந்து துரத்தியடித்த சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது

இந்தச் சம்பவம் மைசூரில் ஹாசன் எனுமிடத்தில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

முதன் முதலில், மணமகனுக்கு ரூ. 3000 வரதட்சிணை தருவதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்ததாம். பின்னர், மணமகன் வீட்டார் ரூ 5000 வேண்டும் என்று வற்புறுத்தினராம். தாலிகட்டும் நேரம் நெருங்கிக்கொண்டே இருந்ததால் மணமக்கள் வீட்டார் வேறு வழியில்லாமல் அதனை ஒப்புக்கொண்டனராம்; ஆனால் மணமகன் வீட்டாரின் ஆசை அத்துடன் நின்றபாடில்லையாம்; அவர்கள், 'இந்தச் சந்தர்ப்பத்தில் எத்தனை கேட்டாலும் பெண் வீட்டார் தந்துவிடுவார்கள்' என்று நினைத்துக் கொண்டு, 'ரூ. 10,000 அளித்தால்தான், தாங்கள் மணமகளின் வீட்டிற்கு வரமுடியும்,' என்று கண்டிப்பாகக் கூறினாராம்.

பெண் வீட்டாரும், ஊர் மக்களும், 'அது நியாயமில்லை,' என்று எடுத்துக் கூறியும், அவர்கள் கேட்கவில்லையாம்!

கடைசியில் கோபங்கொண்ட ஊர்க்காரர்கள், பணமும் கொடுக்க வேண்டாம்; 'பெண்ணும் கொடுக்கவேண்டாம்' என்றுகூறி, மணமகனையும், மணமகன் வீட்டாரையும் துரத்தி அடித்தனராம்.

துரத்தியடிக்கப்பட்ட மணமகன் வீட்டாருக் காரோ குதிரை வண்டியோ கிடைக்காமல், பிள்ளை குட்டிகளுடன் இரயில் நிலையத்திற்கு நடந்தே செல்ல நேரிட்டதாம்!

ரூ. 3 கோடி செலவில் வைகை ஆறு நீர்த் தேக்கத் திட்டம்

20,000 ஏகர் நிலம் சாகுபடிக்கு கொண்டுவரப்படும்

"வைகை நீர்ப்பாசனத் திட்டத் துவக்கத்துடன், சென்னை மாநிலத்திற்கு வேறு நீர்ப்பாசனத் திட்டங்களே கிடையாது; ஏனெனில் அணை கட்டக்கூடிய வேறு ஆறுகள் இனி இங்கு இல்லை; இனி, எங்கெங்கு முடியுமோ, அங்கு சிறிய நீர்ப்பாசன திட்டங்களைத்தான் சர்க்கார் மேற்கொள்ளும்,"

—என்று, மதுரை வைகை ஆற்றில் பெரியகுளம் அருகே கட்டப்படவிருக்கும் அணைக்கு கால்கோல் விழாவாற்றுகையில், சென்னை முதலமைச்சர் காமராசர் குறிப்பிட்டார்.

சுமார் 3 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படவிருக்கும் இந்த அணைக்கட்டுத் திட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் ஒரு முக்கியத் திட்டமாகும். இந்த அணைக்கட்டு வேலை சுமார் நான்கு ஆண்டுகளில் முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் அரபிக் கடலில் பாய்ந்து கொண்டிருந்த பெரியாறு ஆற்றை, ஒரு அணையிட்டுத் தடுத்து, அதன் தண்ணீரை மேற்குத் தொடர்ச்சி மலையைக் குடைந்து சுரங்கத்தின் வழியாகத் திருப்பி, வைகை நதியின் முக்கிய கிளை ஆறான சுருளியாற்றில் பாய ஏற்பாடு செய்யப்பட்டது.

பெரியாறு ஏரியினின்று பாசனத்திற்கு உபயோகமளிக்கும் வகையில், கீழிறங்கும் தண்ணீரின் வேகத்தைக் கொண்டு மின்சார இயக்கத் திட்டம் ஏற்படுத்தலாமென்று கருதப்பட்டது. மேலும், வைகை ஆற்றில் உபயோகப்படுத்த முடியாமல் கடலில் கழிக்கப்படும் ஆற்று வெள்ளநீரையும் தேக்க உதவும்.

இந்தத் தேக்கத்தினால் 20,000 ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்படும் — பெரியாறு படுகையில் அங்கங்கே இருக்கும் நீர்த் தடை ஏற்பட்டுள்ள 3,000 ஏக்கர் நிலப்பரப்புள்ள நிலம், சிவகெங்கைத் தாலுகாவில் 2,000 ஏக்கர் நிலம், திருமங்கலம் தாலுகாவில் 10,000 ஏக்கர் நிலம் தற்பொழுது உபயோகத்திலிருக்கும் பெரியாறு கால்வாய்களைத் தக்க அளவிற்குச் சீர்திருத்தி நீளமாக்கி சிவகெங்கையிலிருக்கும் புதுப் பாசன நிலத்துக்கும் தண்ணீர் அளிக்கப்படும்.

வைகை ஆற்றுக்கு வலது பக்கமுள்ள திருமங்கலம் தாலுகா நிலத்துக்கு பேரணை நீர் திருப்பும் திட்டத்தின் மேற்புறக் கால்வாய்களை ஏற்படுத்தி, 22 மைல் நீளம் கொண்ட பாசனக் கால்வாய் ஏற்படுத்தப்படும் அளவுக்கு அதிகமாக வரும் வெள்ளத்தைத் தேக்கி அந்த நீரை பெரும் வெள்ளத்திற்குப் பிறகு உடன்டியாகக் கழிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வைகை ஆற்றின் வெள்ளத் தேக்க நீரை இந்தத் தேக்கத்தின் மூலம் வேறு பல இடங்களுக்கு நீர்ப்பாசன வசதிக்கு உபயோகப் படுத்தக் கூடாது.

11,675 அடி நீளம் (2 மைல் 1½ பர்லாங்கு) உள்ள இந்த அணை இரு பாகங்களைக் கொண்டது. 1035 அடி நீளமுள்ள கல் அணை 331 அடி நீளம் வெள்ளம் வடிய ஏற்பாடு கொண்டதும் இடதுபுறம் 466 அடி நீளம்—வலதுபுறம் 235 அடி நீளமும் ஆனது. அதேபோல் இக்கல் அணையை ஒட்டி 1780 அடி நீளம் இடதுபுறமும், 8,860 அடி வலதுபுறமும் மண்ணாலானது. மிக ஆழமான இடத்தில் கல் அணையின் உயரம் 106 அடி. 334 அடி நீளம் கொண்ட நீர்வடிப்புக்காக அமைக்கப்பட்ட கல்லணியின்மேல் 40 அடி அகலம் 15.42 அடி உயரம் உள்ள 7 மதகுக் கதவுகள் உள்ளன.

தவிர, 5 அடி அகலம்—9 அடி உயரமுள்ள மற்றும் 7 நீர்ப்பாசன மதகுகள் உள்ளன.

இவை ஆற்றின் மட்டத்திற்கு 20 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தேக்கத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உதவியும், வேறு இடங்களில் குடியேற வசதியும் மற்ற திட்டங்களில் கொடுத்தது போலவே உதவ ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த அலுவல்கள் நில வருமானத் துறையினரால் கவனிக்கப்பட்டு வருகிறது.

அணுசக்தி மின்சாரம்

நிலையம் அமைத்துத்தரும் நிறுவனம்

உலகின் எந்த பாகத்திலும் அணுசக்தி மின்சார நிலையங்கள் அமைத்துக் கொடுப்பதற்கென 3 பெரிய பிரிட்டிஷ் நிறுவனங்கள் சேர்ந்து ஒரு கூட்டு நிறுவனம் ஏற்படுத்தியுள்ளன என்று தெரியவருகிறது.

கழகச் செய்திகள்

கீழப்பாவூர் தி. மு. கழகம்

அஞ்சல் நிலைய அதிகாரிகளுக்கு வேண்டுகோள்

கீழப்பாவூர் கிளை அஞ்சல் நிலையக் காரியாலயத்தில் மட்டும் ஒரு அஞ்சல் பெட்டி வைக்கப்பட்டுள்ளது. கீழப்பாவூர் மக்கள் தொகை 12,000 ஆகும். எனவே அஞ்சல் நிலையத்திற்கு மிக தொலைவில் இருக்கின்ற நாடார் தெரு, கடைத் தெரு (பஜார்) ஆகிய இடங்களிலும் ஒவ்வொரு அஞ்சல் பெட்டி வைத்து பொது மக்களுக்கு வசதி செய்து தரும்படி தபால் நிலைய அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. (ந-நி)

இலங்கை தி. மு. கழகம்

22—5—55 மாலை 4½ மணி அளவில் தோழர் நாகரத்தினம் தலைமையில் கழகச் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெற்றபோது, தோழர்கள் க. அன்பழகன், கண்ணதாசன் ஆகியோரது இலங்கை வருகையையொட்டி, இலங்கை தி. மு. கழகத் தலைமை நிலையச் சார்பில் பொதுக் கூட்டம் நடத்துவது என்றும், கடந்த செயற்குழு கூட்டங்களுக்கு உறுப்பினர்களில் சிலர் தொடர்ந்து வராதிருப்பதால் அவர்களை செயற்குழுவிலிருந்து நீக்கி வைப்பதெனவும், தோழர் எம் ஐ ராஜமணி அவர்களின் விலகல் கடிதம் ஒப்புக்கொள்ளப்பட்டும், தோழர் எஸ். கே. புதுமை கண்ணன் அவர்களை குழுவிலிருந்து நீக்கியும், அவர்களுக்குப் பதிலாகத் தோழர்கள் தலுவத்தை (சிங்களத் தோழர்), மணவத்தம்பி, சண்முகவேல் ஆகியோர்களைத் தேர்ந்தெடுத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்துடன் இலங்கை தி. மு. கழகத் துணைச் செயலாளராகப் பணியாற்றிய தோழர் இரா. மணவழகன் நேர்மையுடன் நடந்துகொள்ளாமையால் பதவியினின்றும் அவரை நீக்கியும், கழக சட்டதிட்டக் குழு செயலாளர் தோழர் அ. ம. அந்தோணிமுத்து அவர்களால் கழக சட்டதிட்டம் வாசித்துக் காண்பிக்கப்பட்டு, குழு மேற்படி சட்டதிட்டங்களை ஒப்புக்கொண்டதுடன், 22—5—55 முதல் மேற்படி சட்டதிட்டம் அமுலாக்கப்படும் எனவும், மேற்படி சட்டதிட்ட நகல்கள் பொதுக்குழு உறுப்பினர்களிடம் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு ஊர்ஜிதம் செய்யப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

புதுவை — அரியநகர் தி. மு. கழகம்

5—6—55ல், அரியநகர் தி. மு. கழக நகர கிளை உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றபோது, கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதுவை — கல்மண்டபம் தி. மு. கழகம்

15—6—55ல், புதுவை நெட்டப்பாக்கம் கொம்யூனைச் சேர்ந்த கல்மண்டபம் கிராமத்திலுள்ள தி. மு. கழக சிற்றூர்க் கிளை உறுப்பினர்கள் கூட்டம், தோழர் அ. அருணகிரி தலைமையில் நடைபெற்றபோது, கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கவுந்தப்பாடி தி.மு. கழகம்

22—6—55 இரவு 8 மணிக்கு அய்யம்பாளையம் தோழர் செல்லப்பன் இல்லத்தில் தோழர் கிருஷ்ணசாமி தலைமையிலும், கவுந்தப்பாடி தி. மு. கழக செயலாளர் இரா. துரை முன்னிலையிலும் நடைபெற்ற தி. மு கழகத் துவக்கவிழாவில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பம்பாய்—தாராவி தி.மு.க.

16—6—55 மாலை 6-30 மணியளவில், கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் 'திராவிடரகத்'தில் தோழர் மா. இரா. குறன்தாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எல். செல்லசெழியன், பி. எஸ் செல்லையா, த. மு. பொற்கோ, ஏ எல். பெருமாள், வடவைக் குயில் ஆகியோர் கழக வளர்ச்சி குறித்து சொற்பொழிவாற்றினர். மாநில மாநாட்டின் நிதிக்காக தாராவி கிளையின் சார்பில் வசூலித்த தொகை ரூ. 174—5—0-ம் பம்பாய் தி. மு. கழக செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அவர்களிடம் தாராவி கிளை செயலாளர் தோழர் சி. த. மு. இர. ஆரிய சங்காரன் அளித்தார். நிதி அளிப்பிற்கு நன்றி தெரிவித்தும், கழகத்தின் வளர்ச்சி குறித்தும் தோழர் தியாகராசன் விரிவுரையாற்றினார்.

பம்பாய்—அந்தேரி தி. மு. கழகம்

19—6—55 மாலை 6 மணியளவில், அந்தேரி தி. மு. கழகச் சார்பில், பம்பாய் தி. மு. கழக செயலாளர் தோழர் தியாகராசன், சட்டதிட்ட அமைப்புக்குழுச் செயலாளர் பொற்கோ ஆகியோருக்கு தோழர் எல். எம். பாண்டியன் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

தோழர் த. மு. பொற்கோ கழகக் கொடியை ஏற்றிவைத்து சொற்பொழிவாற்றினார். பின்னர் தோழர்கள் இரா. தஞ்சைத்துரை, அழகுமுத்து, உ. அ. செல்லையா, வடவைக்குயில், க. ஆ. இராமசாமி, சா. தர்மராசன், தனிக்கொடி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

பாராட்டுரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய தோழர் தியாகராசன் கழக வளர்ச்சி குறித்தும், 'நம் நாடு' வளர்ச்சி குறித்தும், சொற்பொழிவாற்றினார். பின்னர், தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டு நிதிக்காக பம்பாய்—அந்தேரி கிளையின் சார்பில், ரூ. 30ம், காந்தவல்லி கிளையின் சார்பில் ரூ 40-ம் தோழர் தியாகராசனிடம் அளிக்கப்பட்டது.

வங்கனூரில் தி. மு. கழகத் துவக்கம்

22—6—55ல், வங்கனூரில் தி. மு. கழகம் துவக்கப்பட்டு, சோளிங்கபுரம் தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. சம்பந்தன் தலைமையில் செயற்குழு தேர்தல் நடைபெற்றது.

தாரை வட்ட தி. மு. கழகம்

22-6-55 மாலை 3 மணிக்கு, மூலனூர் ரேடியோநிலைய கட்டிடத்தில் தோழர் ந. சின்னமுத்துசாமி தலைமையில் நடைபெற்ற தாரை வட்டக் குழுக் கூட்டத்தில் 30-5-55ல் கன்னிவாடியில் நடைபெற்ற வட்டக் குழுவின் நன்கொடை வரவு-செலவு சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டு, அந்த வகையில் பாக்கி இருப்புத் தொகையை வட்டக் குழுவின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நெல்லை மாவட்ட தி. மு. கழகக் குழு

★

"10-7-55 காலை 10 மணிக்கு, குற்றாலத்தில், நெல்லை மாவட்ட தி. மு. கழகக் குழு கூடுகிறது;

"இக்கூட்டத்தில், மாநில மாநாட்டு நிதி, நெல்லை மாவட்டத்தில் அண்ணா சுற்றுப்பயண நிகழ்ச்சி, எதிர்கால ஆக்க வேலை, மற்றும் செயலாளரால் கொண்டுவரப்படும் முக்கிய தகவல்கள், திட்டங்கள் ஆகியவை பற்றி முடிவு செய்யப்படும்; எனவே, குழு உறுப்பினர்கள் தவறாது வர வேண்டுகிறேன்; அத்துடன், ஒவ்வொரு கிளைக் கழகச் செயலாளரும் இக்கூட்டத்தில் அவசியம் கலந்துகொள்ள வேண்டுகிறேன்;

"கூட்டத்திற்கான ஏற்பாடுகளையும், உணவு—படமெடுத்தல் போன்றவைகளையும், தென்காசி தி. மு. கழகமும், மாவட்ட உறுப்பினர் தோழர் குருசாமி அவர்களும் தக்க முறையில் ஏற்பாடு செய்து வருகிறார்கள்,"

என்று, நெல்லை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அறிவிக்கிறார்.

காளியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

12—6—55 மாலை 6½ மணிக்கு காளி தி. மு கழகப் பொதுக் கூட்டம் தோழர் அனிபா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஜோசப், ஜி எஸ். சாமி, என். எஸ். இளங்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் காசிநாதன் அவர்கள் குழந்தைக்கு தோழர் என். எஸ். இளங்கோ அவர்களால் 'நெடுஞ்செழியன்' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை வழங்கப்பட்டது—பெற்றுக்கொண்டோம்—நன்றி-பொறுப்பாளர்.

பிறப்பு

சித்தூர் தோழர் எம். கே. மூர்த்தி அவர்களது துணைவியார் ஓர் பெண் மகவுக்குத் தாயானார். அதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

டி. ஏ. துரைராஜன் - பொன்ரங்கம் திருமணம்

★

சென்னை, ஜூன் 27—கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் மைத்துனர் தோழர் டி. ஏ. துரைராஜன் அவர்கட்கும்—தோழியர் எம். பொன்ரங்கம் அவர்கட்கும் 26—6—55 காலை 9 மணிக்கு, தியாகராயநகர் வெங்கட்டராமையர் தெரு, எண் 6 இல்லத்தில், டாக்டர் தோழியர் தருமாம்பாள் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

மணமக்களைப் பாராட்டியும், வாழ்த்தியும், அண்ணா, திருக்குறள் முனுசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நாதசுர வித்வான் திரு டி. என். இராஜரெத்தினம் அவர்கள் குழுவினர் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர் டி. கே. சண்முகம் அவர்கள், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் சார்பில் தங்கப் பதக்கம் ஒன்றை தோழர் டி. என். இராஜரெத்தினம் அவர்கட்கு வழங்கி பாராட்டுரை நிகழ்த்தினர்; அண்ணா அவர்களும் பாராட்டுரை வழங்கினார்.

மாலையில் தோழியர் எம். எல் வசந்தகுமாரி குழுவினர் இசை நிகழ்ச்சிகளும், இரவு திருவிதாங்கூர் தோழியர்கள் லலிதா-பத்மினி—ராகினி குழுவினர் நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மணமக்கட்கு நண்பர்கள், உறவினர்களால் பரிசுகளும்-வாழ்த்துமடல்களும் வழங்கினார்கள்.

நாடக நடிகர்—நடிகைகளும், உறவினர்களும், நண்பர்களும் பெருந்திரளாக வந்திருந்தார்கள்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்—டி. ஏ. மதுரம் ஆகியவர்கள் யாவரையும் வரவேற்று நன்றி கூறினர். அனைவருக்கும் விருந்து தரப்பட்டது.

கணேசன்-நாகரெத்தினம் திருமணம்

19—6—55 காலை 10 மணிக்கு, திருச்சி திராவிடப் பண்ணை உரிமையாளர் தோழர் டி. வி. முத்துகிருஷ்ணன் அவர்களது தம்பி தோழர் டி. வி. கணேசன்—தோழியர் நாகரெத்தினம் திருமணம் அண்ணா தலைமையில் நடைபெற்றது.

உலக நிறுவனத்தின் ஒப்பற்ற சேவை

பத்து ஆண்டு கால பணி குறித்து விளக்கம்

ஐ. நா. சாசனம் கையெழுத்தாகி 10 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன. கோடிக்கணக்கான மக்கள் ஐ நா. நிறுவனம் மூலம் பயனடைந்துள்ளனர்; கல்வியில்லாமல் இருந்த பல ஆண்களும், பெண்களும் படிக்கக் கற்றுக்கொண்டுள்ளனர்; உணவற்றவர்களுக்கு உணவு கிடைத்துள்ளது; நோய்களால் பார்வையிழந்தவர்களில் பலர் பார்வை சக்தி பெற்றுள்ளனர்; பழங்கால விவசாய முறைகளைப் பின்பற்றி வறுமையால் வதங்கிய பல விவசாயிகள் புது முறைகளைப் பின்பற்றி நன்மை அடைந்துள்ளனர்.

இரயில் பாதைகள்கூட தேவையான அளவு இல்லாத நாடுகளில் ஆகாய விமான வசதிகளை ஐ. நா. நிறுவனம் அபிவிருத்தியடையச் செய்துள்ளது. வெள்ளத் தடுப்பு முறைகள், பாலைவன நீர்ப்பாசனம், சாலை அமைப்பு பெரும் மின்சாரத் திட்டங்கள் ஏற்படுத்தல் முதலிய நடவடிக்கைகளுக்காக அந் நிறுவனம் தொழில் நுணுக்க யோசனைகளும், கடனுதவிகளும் அளித்துள்ளது. முன்னேற்றமடைவதற்கு விஞ்ஞான ரீதியில் அமைப்பை ஏற்படுத்த நாடுகளின் பொருளாதார வசதிகளையும் இந்த நிறுவனம் ஆராய்ச்சி செய்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் ஐ. நா. சபை நிறுவியுள்ள பத்து பிரத்தியேக நிறுவனங்கள், மக்களின் பொதுநலத்தைக் கவனித்து ஐ. நா. பொருளாதார சமூகக் கவுன்சிலுக்கு அவ்வப்போது அறிக்கை சமர்ப்பித்து வருகின்றன; இவைகளில் பல சுதந்தரமாக இருந்தவை; உதாரணமாக, சர்வதேச தொழில் நிறுவனம் 1910-ல் அமைக்கப்பட்டது. அது, இப்பொழுது ஐ. நா.-வுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. உலகமெங்கும் வாழ்க்கை, வேலை வசதிகளை உயர்த்தி, வறுமையை ஒழிக்க இது பணியாற்றி வருகிறது.

அறிவையும், தேர்ச்சியையும் பல்வேறு நாடுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ள வசதியளிக்கும் ஐ நா. தொழில் நுணுக்க உதவித் திட்டத்தில், சர்வதேச தொழில் நிறுவனம் உட்பட ஐ நா.-வின் முக்கிய நிறுவனங்களில் பல ஒத்துழைக்கின்றன.

சுகாதாரத்தை வளர்க்க உலக சுகாதார நிறுவனமும், உணவளிக்க உணவு—விவசாய நிறுவனமும், சமூக நீதியை அமைக்க சர்வதேச தொழில் நிறுவனமும், விமானப் பிரயாண வசதிகள் ஏற்படுத்த சர்வதேச விமானப் பிரயாண நிறுவனமும், கல்வியின்மையை ஒழிக்க ஐ. நா. கல்வி—விஞ்ஞான—கலாச்சார நிறுவனமும் இயங்கி வருகின்றன இவைகளைத் தவிர சர்வதேச செய்திப்போக்குவரவு நிறுவனம், உலக வானிலை ஆராய்ச்சி நிறுவனம், சர்வதேச குழந்தைகள் நிதி, உலக பாங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவை மற்ற முக்கியப் பிரிவுகளாகும்.

மீன் வளர்ப்பு முதல் நிதிச் சீர்திருத்தம் வரை பல்வேறு தொழில் நுணுக்கப் பிரச்சினைகளை இவை கவனித்து வருகின்றன; ஆனால், சுகாதாரத் துறையில் தொழில் நுணுக்க உதவி பெரும் அளவில் பலனளிக்கின்றது.

ஆண்டுதோறும் மலேரியாவால் இறப்பவர்கள் உலகில் சுமார் 30 கோடி; மேலும் 30 கோடி பேர் பாதிக்கப்படுகின்றனர். இந்த நோயை உலகத்திலிருந்து அகற்றுவதற்குத் தேவையான நுணுக்க அறிவை மனிதன் பெற்றுள்ளான். சர்வதேச சுகாதார நிறுவனம் மலேரியாவை அறவே ஒழிப்பதற்கு மாபெரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. மலேரியா, க்ஷயநோய், மேகநோய் முதலியவைகளை உலகத்திலிருந்து போக்க தீவிர முயற்சி எடுக்கிறது.

சர்வதேசக் குழந்தைகள் அவசர நிதி நிறுவனமும் சுகாதார அபிவிருத்திக்கு உதவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. சுமார் 100 நாடுகளில் இந்த நிறுவனத்தைச் சேர்ந்த குழுவினர் தொண்டு செய்கின்றனர்; 430 லட்சம் குழந்தைகளுக்கு க்ஷயநோய் தடுப்பு ஊசிகள் குத்தினர்; 40 லட்சம் பேருக்கு மேகநோய்ச் சிகிச்சை அளித்துள்ளனர்; கடந்த ஆண்டில் மட்டும் 50 லட்சம் பேருக்கு பாலும், 70 லட்சம் பேருக்கு மலேரியாத் தடுப்பு சிகிச்சையும் இந்த நிறுவனம் அளித்தது.

உலகத்திலுள்ள குழந்தைகளில் பாதிக்குமேல் பள்ளிக்குச் செல்வதில்லை; எனவே, அடிப்படைக் கல்வி அத்தியாவசியமாகின்றது. ஐ. நா. கல்வி—விஞ்ஞான—கலாசார நிறுவனம் இதில் முக்கிய கவனம் செலுத்துகின்றது. கோடிக்கணக்கானவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பது ஒரு தனி நிறுவனத்தினால் மட்டும் செய்யக்கூடிய பணியன்று. எனவே, கல்வி கற்றுக் கொடுப்பதற்கு பல்வேறு நிலையங்களை இந்நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது.

1950 ஜூலை மாதத்திற்குப் பிறகு 120 நாடுகளுக்கும், பிராந்தியங்களுக்குமாக ஐ. நா.-வைச் சேர்ந்த 5000 நிபுணர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் 70 நாடுகளைச் சேர்ந்தவர்கள்; எனவே, குறிப்பிட்ட ஒரு நாட்டில் தான் தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கின்றனர் என்ற கூற்றுக்கு சிறிதும் ஆதாரமில்லை.

பல நாடுகளுக்கும் தீர்க்கப்பட வேண்டிய பொதுப் பிரச்சினைகள் பல இருப்பதால், ஐ. நா. நிறுவனம்

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தி திணிக்கப்படுவது ஏகாதிபத்திய நோக்கமல்லவாம்!

வேற்றுமைகள் பல உண்டாம்; ஆனாலும் இந்தியா ஒரே நாடாம்!

குடியரசுத் தலைவரின் நயமான பேச்சு

"தென் இந்தியாமீது இந்தியைத் திணிப்பது சர்க்கார் நோக்கமல்ல; சிலர் இந்தி திணிக்கப்படுவதாக புகார் செய்கிறார்கள்;

"'இந்தி ஏகாதிபத்தியம்' புகுத்தப்படுகிறது என்ற பிரச்சினை எழவில்லை; யாரும், அம்மாதிரி இந்தி ஏகாதிபத்தியம் பற்றி கனவு காணவில்லை;

"மக்கள், ஒரு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முறியடித்தது, வேறொரு வகையான ஏகாதிபத்தியத்தை புகுத்துவதற்காக அல்ல;

"எனவே, 'தென் இந்தியர்கள்மீது இந்தி ஆதிக்கம் செலுத்துகிறது' என்ற சந்தேகம் ஏற்படலாகாது;

"பல்வேறு வேற்றுமைகள் ஏற்பட்டிருந்த போதிலும் இந்தியா ஒரே நாடுதான்; ஒரு பகுதி, மற்றொரு பகுதிமீது ஆதிக்கம் செலுத்தும் பிரச்சினையே எழக்கூடாது; விவேகமுள்ள எவரும் இந்தியாவின் ஒற்றுமையை (!) அழிக்க முயற்சிக்க மாட்டார்கள்.

"இலக்கிய, சரித்திர வளம் காரணமாகவோ அல்லது இந்தி, மற்ற மொழிகளை விட தொன்மையானது என்ற காரணத்தினாலோ அது தேசீய மொழியாக ஏற்றுக்கொள்ளப் படவில்லை; மற்ற மொழிகளைவிட இந்தி பேசும் மக்கள் அதிகமாக இருப்பதாலும், இதை அதிகமான மக்கள் புரிந்து கொள்வதாலும்தான் (!) தேசீய மொழியாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டது."

—என்று ஏக இந்திய ஏகாதிபத்தியத் தலைவர் இராசேந்திரர், ஐதராபாத்தில், ஆந்திரா யுராதி மண்டல் ஹாலில் நடைபெற்ற ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்து இந்தியில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஏகாதிபத்திய நோக்கல்லவாம்!

மேலும் அவர் குறிப்பிட்டார்:—

"சர்க்கார் உத்தியோகங்களுக்காக நடத்தப்படும் போட்டிப் பரீட்சைகளில் வெற்றிபெற இந்தியில் மாத்திரமே 'மார்க்கு'கள் வாங்கினால் போதாது என்பதே என் கருத்து; நடத்தப்படும் போட்டிப் பரீட்சையில் இந்தியை ஒரு பாடமாக வைக்கவேண்டுமென்பதே என் சொந்தக் கருத்து; ஆனால், பரீட்சை முடிவுகள் வெளியிடும்போது, இந்தியில் வாங்கப்பட்ட மார்க்குகளை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது; வெற்றி பெற்றவர்கள் தங்கள் இந்தி அறிவை பயன்படுத்திக் கொள்ளலாம்; ஏற்கனவே சர்க்கார் அலுவலகங்களில் உழைந்தவர்கள் இந்தி கற்க வசதி செய்து தரவேண்டும்; இதற்காக அவர்களுக்கு மாறி மாறி ஒரு வருடமோ, ஆறு மாதமோ விடுமுறை அளிக்கலாம்; இது சாத்தியமில்லையானால், இந்தி தெரியாத சர்க்கார் ஊழியர்கள் தினம் ஓரிரண்டு மணி நேரம் இந்தி கற்றுக்கொள்ளலாம்; வேலை நேரத்திலேயே ஓரிரண்டு மணி நேரம் அவர்கள் இந்தி கற்றுக்கொள்ள அனுமதிக்கவேண்டும்.

"டில்லியில் ஆயிரக்கணக்கான சர்க்கார் ஊழியர்கள் அலுவல்; அலுவல்களை இந்தியில் நடத்த இயலவில்லை எனின், அவர்களுக்கு இந்த வகுப்புகள் பயன்படமுடியும்.

"பள்ளிக்கூடங்களைப் போல் இந்த வகுப்புகளுக்கு வரும் நபர்களுக்கு 'ஆஜர்' பட்டியல் எடுக்க வேண்டும்; இவர்களது திறமையைச் சோதிக்க அடிக்கடி பரீட்சை நடத்த வேண்டும்.

"சுமார் 5 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியில் அலுவல்களை நடத்த திறமையுள்ளவர்களுக்கே உயர்ந்த மேல் பதவி கொடுக்க வேண்டும்."

கடன் கேட்பார்களாம்!

ரூ. 5 முதல் 10 கோடி வரை தேவையாம்

சென்னை, ஜூன் 25—

சென்னை சர்க்கார், தங்களுக்குத் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிற ரூ. 5 கோடி முதல் 10 கோடி ரூபாய் வரை பெறுவதற்காக, வரும் ஜூலைத் திங்கள் இறுதியிலோ ஆகஸ்டு திங்கள் துவக்கத்திலோ கடன் எழுப்ப வேண்டியிருக்குமென நிதிமந்திரி சி. சுப்பிரமணியம் தகவல் தந்திருக்கிறார்.

திருச்சி மாவட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

"3-7-55 பிற்பகல் 2 மணிக்கு, துறையூர் தி. மு. கழக அலுவலகத்தில், மாவட்டச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். பொருள்: மாநில மாநாட்டு நிதி வசூல்; வரவு-செலவு; வட்டக் குழு அமைப்பு,"

என்று, திருச்சி மாவட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

திருமணங்கள்

30—6—55 காலை 10 மணிக்கு, சேலம் மாவட்டம், வீரக்கவுண்டனூரில், தோழர் பூ. பச்சமுத்து இல்லத்தில், தோழர் சின்னு—தோழியர் திருவாய் அம்மாள், தோழர் இராமு—தோழியர் பொன்னம்மாள் திருமணங்கள், தோழர் நா. வீரன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., தி. ஆனைமுத்து, தி. பூ. பச்சமுத்து, தி. கூ. அண்ணாமலை ஆகியோர் பேசுவர்.

* * *

30—6—55 காலை 8 மணிக்கு, பெரியகுளம் மணமகன் இல்லத்தில், தோழர் எம். சந்திரசேகரன்—தோழியர் டி தங்கம்மாள் திருமணம், தோழர் மீ சு. திருநாவுக்கரசர் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ப. நாராயணன் எம்.சி., பி. சமதர்மம் எம்.சி., எஸ் எஸ். மதிமாறன் ஆகியோர் பேசுவர்.

போர்த்துகீசியரின் மிருக வெறி!

போராட்ட வீரர்கள் அடித்துக் கொல்லப்படுகின்றனர்!

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஒருவர் பலி!

கோவாஎல்லை, ஜூன் 26—

கோவா விடுதலைப் போரில் அணிவகுத்துச் சென்றவர்கள் மீது போர்த்துகீசிய போலீசார் நடத்திய வெறித்தாக்குதலுக்கு இருவர் பலியாக்கப்பட்டனர் என்ற சோகச் செய்தி எட்டியிருக்கிறது.

பலர் படுகாயங்களுடன் மருத்துவ மனைகளில் சிகிச்சை செய்யப்படுகின்றனராம்.

தாக்கூர் குலாப் சிங் என்ற பார்வார்டு பிளாக் தோழரின் தலைமையில் சென்ற 57 வீரர்களில் ஒருவரான அமீர்சந்த் குப்தா முதலில் பலியானார்.

இருவரையும், இன்னும் சிலரையும், போலீசார் மிருகத்தனமாகத் தாக்கியதின் விளைவாக விலா எலும்புகளும், தோள் பட்டை எலும்புகளும் முறிந்துவிட்டிருக்கின்றன.

அமீர் சந்தின் எட்டு மார்பு எலும்புகள் நொறுக்கப்பட்டதுடன், அவரது வலது காதையும் போலீசார் அறுத்துவிட்டு, கோவா எல்லைக்குக் கொண்டுவந்து தங்களின் 'பூட்ஸ்' அணிந்த கால்களால் மிதித்துத் துவைத்து, இந்திய எல்லைக்குள் தூக்கி எறிந்துவிட்டனராம்.

அவரை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றும், பலன் இல்லாது போய்விட்டிருக்கிறது.

அவரது மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் பெல்காமில் உள்ள கடைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன.

கோவா எல்லைக்குள் நுழைந்த 24 பேர் கொண்ட மற்றுமோர் போராட்டக் குழுவினர் மீது, சாதாரண உடையிலிருந்த போர்த்துகீசிய போலீசார் எனக் கருதப்படும் இருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக இரு தொண்டர்கள் படுகாயமுற்றனர் என்று கூறப்படுகிறது.

பின்னர், அவர்கள் இருவரும், இந்திய எல்லைக்குள் வந்து பல சிகிச்சைகள் தரப்பட்டும் பலன் இன்றி துப்பாக்கிக் குண்டுகள் விளைத்த படுகாயங்களுக்கு ஒருவர் பலியானார் என்று தெரியவருகிறது.

நேபர் விழிப்பு?

"இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் இந்திய மக்களுக்கு அதிக ஆத்திரத்தை உண்டுபண்ணி, இரு நாடுகளுக்கும் இடையில் இருந்த மனக்கசப்பை ஏற்படுத்திவிடும். இந்த விதமாக இந்திய சர்க்காரின் 'பொறுமை'யை மேலும் மேலும் சோதிக்க வேண்டாம்,"

என்று, அ. இ. காங்கிரஸ் தலைவர், லிஸ்பனுக்கு எச்சரிக்கைக் குறிப்புத் தந்துள்ளார் எனத் தெரிகிறது.

சர்க்கார் ஊழியரின் சம்பளம்!

'மாற்றியமைக்கப்பட வேண்டும்' கவர்னரின் ஒப்பம்

சென்னை, ஜூன் 27—

"உண்மையில், இந்த மாநிலத்தில், சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படும் சம்பளங்கள் பற்றி எனக்குச் சங்கடம் ஏற்பட்டுள்ளது;

"கவர்னர், உயர் நீதிமன்ற நீதிபதிகள் தவிர, மந்திரிகள் உட்பட மற்றெல்லோருக்கும் சரியான சம்பளம் தரப்படவில்லை; மேலிருந்து அடிவரை சம்பள விகிதங்களை மாற்றி அமைத்தால் நன்றாக இருக்கும்; இது குறித்து மந்திரிகளுடன் நான் பல முறை கலந்து பேசினேன்

"நிதி நிலைமை மோசமாக இருப்பதே சம்பள உயர்வு கொடுக்காததற்குக் காரணம் என்று கூறப்படுகிறது; இந்தப் பிரச்சினைக்கு சர்க்கார் தலைமை அலுவலகத்தில் பணிபுரிவோர் வழிகண்டுபிடித்தாக வேண்டும்; அவர்களுக்கு என்னுடைய பரிபூரண ஆதரவு இருக்கும்,"

என்று, சென்னை கவர்னர் பிரகாசா, சென்னை சர்க்கார் தலைமை அலுவலக ஊழியர் சங்க ஒன்பதாவது ஆண்டு விழாவுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சங்கத் தலைவர் வரவேற்புரை நிகழ்த்துகையில், 'மத்திய சர்க்கார் ஊழியர்கள், மாநில சர்க்கார் ஊழியர்கள் ஆகிய இருசாராரின் சம்பளம், படி விகிதங்கள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்,' என்று கோரியிருக்கிறார்.

போலீசாரின் கெடுபிடிக்கிடையே தெ.ஆ. மக்கள் காங்கிரஸ் மாநாடு

சுதந்திர சாசனத்தை பகிரங்கமாக நிறைவேற்றியது

ஜோகனஸ்பர்க், ஜூன் 28—

தென்னாப்பிரிக்க மக்கள் காங்கிரஸ் மாநாடு தனது 'சுதந்திர சாசனத்தை' பகிரங்கமாக நிறைவேற்றிப் பிரகடனம் செய்திருக்கிறது.

மேற்படி மாநாட்டின் இறுதிக் கட்டத்தின்போது சுமார் 200-போலீசார் ஆயுதங்கள் தரித்துக் கொண்டு, மாநாடு நடைபெற்ற பகுதியை வளைத்துக் கொண்டனராம். 25 போலீசாருடன் ஒரு அதிகாரி மேடைமீது ஏறியதும், மாநாட்டின் தலைவராயிருந்த ஐரோப்பியரான ரீபல்வெல்ட் என்பவர் ஒரு சோதனை வாரண்டு வந்திருப்பதாக மாநாட்டில் குழுமியிருந்தவருக்குத் தெரிவித்திருக்கிறார்.

இராஜாங்கத் துரோகம் பற்றிய புகார் சம்பந்தமாகவும், கலகப் பிரசுரங்களைத் தேடுவதற்காகவும் அந்த சோதனை வாரண்டு பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

போலீசாரின் மிரட்டல்களுக்கு இனி அஞ்சப் போவதில்லை என்று தலைவர் அறிவித்ததும், அங்கிருந்த பொதுமக்களும், பிரதிநிதிகளும் ஆப்பிரிக்க தேசியப் பாடலைப் பாடினராம். அத்துடன் தென் ஆப்பிரிக்க சுதந்திர சாசனம் பிரிவு வாரியாக நிறைவேற்றப்பட்டதாம்.

மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே போலீசார் அங்கிருந்த எல்லா தஸ்தாவேஜுகளையும் கைப்பற்றிக் கொண்டனராம். பின்னர் போலீஸ் அதிகாரிகள் மாநாட்டு வாசலில் நின்றுகொண்டு, ஒவ்வொரு பிரதிநிதியையும் வெளியே அழைத்து அவரவர் பெயர்களையும், முகவரிகளையும் கேட்டு எழுதிக் கொண்டதாகவும், வெள்ளைக்கார பிரதிநிதிகள் புகைப்படம் பிடிக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

மொத்தம் சுமார் 3000 பிரதிநிதிகள் இந்தவிதமாகக் குறிக்கப்பட்டுள்ளனராம்.

மேலும் 50 பிரதிநிதிகளை போலீசார் கைது செய்து போலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றதாகவும், 'பர்மிட்' அல்லது 'பாஸ்' போன்றவைகள் கொண்டு வரவில்லை என்பது போன்ற அற்ப காரணங்களுக்காகவே அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படுவதாகவும் தெரிகிறது.

மாநாடு நடைபெற்ற இடத்தில் ஒரு 'ஸ்டாலை,' போலீஸ் அதிகாரி ஒருவர் தாக்கித் தரைமட்டமாக இடித்துத் தகர்த்தார் என்றும், மாநாட்டில் கட்டப்பட்டிருந்த கொடிகள் முதலியவற்றையெல்லாம் போலீசார் மூட்டைகளில் கட்டி எடுத்துப் போனார்கள் என்றும் செய்தி ஒன்று அறிவிக்கிறது.

செஞ்சீனாவில் ஹோ-சி-மின்

மா-சே-துங் விமான நிலையத்தில் வரவேற்ற காட்சி

வட வியட்நாம் கம்யூனிச குடியரசுத் தலைவர் டாக்டர் ஹோ-சி-மின் சீனத் தலைநகரான பீகிங் சென்றடைந்தார்.

அவரை விமான நிலையத்தில் செஞ்சீனத் தலைவர் மா-சே-துங் வரவேற்றிருக்கிறார்.

இருவரும் கைகுலுக்கிவிட்டு மார்புறத் தழுவிக்கொண்டனராம்.

கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள், மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரம் செய்திருக்கின்றனர்.

தனது சீன வருகை, இருநாடுகளின் நேசத்தை வளர்க்கவும், உலகத்திற்கு உதவவும் பயன்படும் என்று டாக்டர் ஹோ-சி-மின் குறிப்பிட்டிருக்கிறார்.

கொடுவினையை......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மண வாழ்க்கை நடத்திவந்தார், மணவாளனை டாக்டர் ஒருவருடன். ஆனால், மண விலக்கு செய்துகொண்டார்—என்ன காரணம் என்பது அறிவிக்கப்படவில்லை என்றாலும், பின்பும் அந்த டாக்டருடனேயே வசித்து வந்திருக்கிறார். ஓர் நாள், தன் காதலனின் தூண்டுதலின்பேரில் டாக்டருக்கு—தன் முன்னாள் கணவருக்கு விஷம் தந்தாள்

விளைவு, எட்டாண்டு காலம் சிறைகாவல் தண்டனை தந்தது ஆஸ்திரிய நீதிமன்றம் அது மட்டுமா? அந்த நடிகை தனது முன்னாள் கணவருக்கு நஞ்சூட்டிய நாளான ஜனவரித் திங்கள் ஏழாம் நாளன்று ஒவ்வொரு ஆண்டும் தனியான இருட்டறையில் அடைக்கப்படுவார்—தன் முன்னாள் கணவருக்கு விஷமிட்ட நாளை நினைவுபடுத்திக்கொள்வதற்காக!

உலக நிறுவனத்தின்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மூன்று பிராந்திய அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது. ஆசியா தூரக் கிழக்கு, ஐரோப்பா, தென் அமெரிக்கா ஆகிய பிரதேசங்கள் தான் இம்மூன்று பிராந்தியங்களும். பொருளாதாரத் திட்டங்களை வகுக்கத் தேவையான தகவல்களைச் சேகரித்து நாடுகள் கூட்டுறவு முறையில் ஒன்று சேர்ந்து இயங்குவதற்கு இம்மூன்று பிராந்திய அமைப்புகளும் வசதியளித்துள்ளன.

"நாகரீகத்தின் பயனை மனித வர்க்கம் பூராவும் அடைய வசதி செய்யலாம் என சரித்திரத்தில் மக்கள் முதன் முதலாக நம்புவதற்கு இடம் தரும் காலம் இதுவே,"

என பிரபல பிரிட்டிஷ் சரித்திராசிரியர் கூறியிருப்பது கவனத்திற்குரியதாகும்.

தஞ்சை மாவட்ட நீதிபதி

பாராட்டும் தேநீர் விருந்தும்

கும்பகோணம், ஜூன் 27—

தஞ்சை மாவட்ட மாஜிஸ்திரேட்டாக இருந்து தற்போது தஞ்சை மாவட்ட நீதிபதியாக பதவி உயர்வு பெற்றுள்ள திரு. எஸ். ஏ. அய்யாசாமி அவர்களைப் பாராட்டி, குடந்தை கிளப் டவுன் மண்டபச் சார்பில் ஒரு தேநீர் விருந்தளிக்கப்பட்டது. அந்த விருந்தில் பல அரசாங்க அலுவலர்களும், பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன், எம். ஏ.